**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.52/2021**

2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 14 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 14.03.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருஞானம் | ஜாதி | : |
| த/பெயர் | : முருகையன் | மதம் | : |
| கிராமம் | : | தொழில் | : |
| வட்டம் | : | வயது | : |

**வா.சா.1 முன்னிலை குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது நிரூபண வாக்குமூலத்திலும், வழக்குரையிலும் தாவா சொத்து தொடர்பாக நான்தான் ஒப்பந்தம் போடப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் அப்பா கடந்த 2017-ம் வருடம் இறந்துவிட்டார். கடந்த 2017 முதல் 3 வருடத்திற்கு காலத்திற்குள் தாவா வழக்கு சொத்தை கிரையம் சாசனம் செய்துக்கொடுக்க சொல்லி சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நேரடியாக கேட்டேன். தாவா சொத்து நீண்ட காலமாக என் அனுபவத்தில் உள்ளதால் எனக்கு சொந்தமாகிவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

நீண்ட கால அனுபவத்தின் அடிப்படையில் தாவா சொத்து எனக்கு சொந்தமானது என்று சொல்லி கேட்டுள்ள பரிகாரத்திற்கு நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தவில்லை. தாவா சொத்து எனக்கு சொந்தமானது என சொல்லி நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்பதால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து கடந்த 1991 முதல் என்னிடமோ என் தகப்பனாரிடமோ இல்லை என்றால் சரியல்ல.

தாவா வழக்கு சொத்து தொடர்பாக பிரதிவாதிகள் என் மீது ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் அனுபவத்திலுள்ள

சொத்துக்களை பொறுத்து நான் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என சொல்லி என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

தீர்வு சான்று பெறுவதற்காக எந்த அலுவலகத்தில் நான் மனு கொடுத்தேன் என்றால் மன்னார்குடி வட்டாட்சியர் மற்றும் மயிலாடுதுறை நில சீர்திருத்த ஆணையரிடமும் மனு கொடுத்துள்ளேன். எந்த தேதியல் மேற்கண்ட மனுவை கொடுத்தேன் என சொல்லி வழக்குரையில் சொல்லவில்லை என்றாலும், அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் என் மீது கொடுத்துள்ள வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக அவர்கள் மீது வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இன்றைய தேதியில் தாவா சொத்திற்குண்டான சிட்டா, அடங்கள் போன்ற ஆவணங்கள் பிரதிவாதிகள் பெயரிலுள்ளது என்றாலும், அவர்கள் அனுபவத்திலுள்ளது என்றாலும் சரியல்ல.

பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கை மறுத்து நான் எவ்வித ஆட்சேபணையும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்குரையில் சொல்லியுள்ளதுபோல் வழக்குரையில் சொல்லியுள்ள தொகைக்கு கிரைய ஒப்பந்தம் போடப்படவில்லை என்றாலும், தாவா சொத்தின் அனுபவம் எனது தகப்பனார் வசம் ஒப்படைக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல் உண்மையிலேயே எனது தகப்பனார் காலத்திலேயே உரிய சட்டநடவடிக்கை எடுத்து கிரைய சாசனம் செய்திருப்பார் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டதென்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல. உண்மையான உரிமையாளருக்கு எதிராக நான் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2025.03.14 18:47:28 +0530

District Munsif

Mannargudi.